Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II TIRUPATTUR**

Case No. CC.NO. 266/2026

**<u>DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 5 Page.No.</u>**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. சதீஷ்குமார் | **தொழில்** | உதவி ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. ராஜேந்திரன் | **கிராமம்/ ஊர்** | திருப்பத்தூர் |
| **வயது** | 35 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 10th day of August 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை.-</u>**

1. நான் தற்போது திருப்பத்தூர் கிராமிய காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது, மனுரசீது எண் 135/2025 ஐ பரிசீலனை செய்து நிலைய குற்ற எண் 92/2025 இதச பிரிவுகள் 294(b), 115(2), 118(1), 351(3) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 08.03.2025 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜான் வேளாங்கண்ணன் மற்றும் சகாயமேரி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் என்னால் அ.சா.ஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)**

2. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே 10.00 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து ஸ்டீல் ஸ்பேனர் ஒன்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றிக்கொண்டேன். (**அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 – 6 வரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்க அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரியானர் மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை.

3. பின்னர் வழக்கு சம்பவத்தில் காயமடைந்த மரியலூயிஸ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. செந்தில்குமாரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அந்த காயச்சான்று ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறயீடு செய்யப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச்சான்றிதழ் வழங்கியுள்ளதால் வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 294(b), 115(2), 118(1), 351(3)லிருந்து இதச பிரிவுகள் 294(b), 117(2), 118(1), 351(3) ஆக சட்டப்பிரிவை மாற்றம் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 117(2), 118(1), 351(3) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 01.03.2025 அன்று இரவு 08.00 மணிக்கு சம்பவம் குறித்து எனக்கு தகவல் கிடைத்தது. நான் மருத்துவமனைக்கு 8.15 மணியளவில் சென்றேன். மருத்துவமனைக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் வெஷ்லி என்பவர் சென்றார். நான் csr ஐ பரிசீலித்து வழக்கை பதிவு செய்தேன். வழக்கில் காயமுற்ற நபர் மருத்துவரிடம் எந்த இடத்தில் சம்பவம் நடைபெற்றதாக தெரிவித்துள்ளார் என்றால் தனது நிலத்திடம். மருத்துவர் புகார் வீட்டிடம் சம்பவம் நடைபெற்றதாக சாட்சியம் அளித்து இருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்று விசாரிக்காததால் சம்பவம் நடைபெற்ற இடம் குறித்து என்னால் சரியாக சாட்சியம் அளிக்க முடியவில்லை என்றால் சரியில்லை. நான் வழக்கின் முதல் தகவல் அறிக்கையை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால்

சரியல்ல. காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை அனுப்பியதற்கு நான் என்ன காரணமும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் எப்போது சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் 08.03.2025 அன்று காலை 07.00. கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் 07.30 மணியளவில் மேற்படி ஆவணத்தின் சாட்சியாக கையொப்பம் செய்ததாக தங்களது 161 வாக்குமூலத்தில் கூறியுள்ளதால் கைப்பற்றுதல் மகசர் காலை 10.00 மணிக்கு தயாரிக்கப்பட்டதாக நான் முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முரண் பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் எந்த இடத்தில் சம்பவம் நடைபெற்றதாக கூறியுள்ளார் என்றால் தனது நிலத்திடம். ஆனால் அது குறித்து மாதிரி வரைபடத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அது போன்ற சம்பவமே நடைபெறாததால் நான் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் புகார்தாருக்கு சொந்தமான கொட்டகை குறித்து குறிப்பிடபடவில்லை என்றால் பம் செட் என்று குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சொத்தை 6 மாதம் காலதாமதமாக நான் நீதிமன்றித்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மோட்டாரை நிறுத்திய போது சம்பவம் நடைபெற்றதாக என்னிடம அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. என்னிடம் அளித்த புகாரில் எதிரி தன்னை காலால் உதைத்தாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.2, சம்பவத்தின்போது அ.சா.1 சம்பவ இடத்தில் படுத்திருந்ததாக என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. புகார் வாக்குமூலத்தில் தலையில் குறிப்பாக இடத்தில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தலையில் என கூறியுள்ளார். அ.சா.1 மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சையில் இருக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.3 தனது முதல் விசாரனையில் மாலை 07.00 மணிக்கு மககசரில் கையொப்பம் செய்துள்ளதாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அ.சா.3 தனது முதல் விசாரனையில் நான் மருத்துவமனையில் விசாரித்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை –**</u> இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Signature of Witness

Judicial Magistrate No.II
Tirupathur.